# புலிகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் ரணில் - ஸ்ரீமாவோ வாக்குவாதம்

விடுதலைப்புலிகள் தொடர்பாக நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் பலத்த வாக்குவாதங்களும், பரஸ்பர குற்றச்சாட்டுக்கணைகளும் தீவிரமாக இருந்தன அவசரகாலச் சட்டம் நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, ''இப்போதைய பிரேமதாஸ அரசுதான் புலிகளுக்கு முன்னர் ஆயுதங்களை வழங்கி ஊக்குவித்தது. இதை எனக்கு சில இராணுவ அதிகாரிகளும் ஊர்ஜிதப்படுத்தினர். அரசு சிங்கள மக்களின் கவனத்தைத்திசை திருப்பவே தேவையற்ற ஆடம்பர நிகழ்சிகளை ஒழுங்கு செய்து நடாத்துகிறது. இதற்கான பணத்தை இராணுவத்துக்குச் செலவிடலாம் அரசின் போக்கினால் போரில் வெற்றிபெற முடியாத நிலை ஏற்படலாம்'' எனக்குறிப்பிட்டார். விவாதத்தின் முடிவில் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் ரணில் விக்கிரம

—04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 241 பிரசோத்பதி ஆடி 11 ( 27 - 07 - 1991 ) சனி

★ கொழும்புப் பத்திரிகை கண்டனம்

# திறமையற்ற இராணுவத் தலைமை படையினரைப் பாதிக்கிறது!

## தற்போதைய ஆட்சியிலேயே இராணுவம் அதிக இழப்பைச் சந்திக்கிறது

**ஜனாதிபதி பிரேமதாஸவின் தற்போதைய யூ. என். பி. அரசின் ஆட்சிக் காலத்திலேயே ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைக்கு அதிக அளவில் ஆட்சேதம், பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது. இது அனுபவம்குறைந்த இராணுவத் தலைமையையே காட்டுகிறது இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்று கண்டனம் தெரிவித்துள்ளது.**

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் இப்படியானதோர் இக்கட்டான நிலையை பாதுகாப்புப்படையினர் சந்திக்கவில்லை எனக் கூறும் இப்பத்திரிகை, அப்போது இராணுவத்தில் அரசியல் தலையீடோ அல்லது திறமையற்ற அதிகாரிகளோ இருந்ததில்லை எனச்சுட்டிக் காட்டுகிறது.

தற்போதைய அரசினால் பெருமளவில் நவீன ஆயுதங்கள் தருவிக்கப்பட்டும் அவற்றைகையாளும் திறமையோ, விவேகமோ இப்போதுள்ளவர்களுக்குகுறைவாகவே உள்ளது

திறமை வாய்ந்த தலைமை இல்லாமை சாதாரண படைவீரர்களின் உத்வேகத்தையும்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ ஆட்சேர்ப்பு துரித கதியில் நடக்கிறது

கொழும்பு ரீட் அவென்யூ இராணுவ தலைமையகத்தில் அவசர அவசரமாக ஆட்சேர்ப்பு நேர்முகப்பரீட்சைகள் நேற்று முன் தினமும் நேற்றும் நடைபெற்றன.

கொழும்பு நேர்முகப்பரீட்சைக்கு 20,000 சிங்கள இளைஞர்கள் வந்திருந்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தகைய நேர்முகப்பரீட்சை குருநாகல், கண்டி, மின்னேரியா, மாத்தறை ஆகிய பகுதிகளிலும் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

## புதிதாக கரையிறங்கிய படையினர்பாதுகாப்புஉஷார்

வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு பகுதியில் படையினர் மேலும் தரையிறக்கப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

படகுகள் கரைக்கு வந்து செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது

தற்போது வெற்றிலைக் கேணியில் தரையிறக்கப்பட்ட படையினர் தாங்கள் நிலைகொண்டுள்ள பகுதிகளைப் பாதுகாப்பதிலேயே உஷாராக இருப்பதாகத் தெரி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழீழ மக்களுக்கோர் அன்பான வேண்டுகோள்

போர்முனையில் காயமுற்று மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் போராளிகளுக்கு வேண்டிய மெத்தைகள், தலையணைகள், இளநீர், படுக்கை விரிப்புகள், பழம் துணிகள் போன்றவற்றை தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தைச் சேர்ந்தோர் வீடுவீடாகச் சேகரிக்க வருவர். அவர்களுக்குத் தாராளமாகவழங்கி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## பிரான்ஸ் வைத்தியகுழுவின் மின் குமிழ்கள் திருட்டு

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் பணிபுரியும் பிரான்ஸ வைத்தியக்குழுவின் வாசஸ்தலத்தில் இயங்கி வந்த சூரிய ஒளியில் இயங்கும் மின் குமிழ்கள் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து பிரான்ஸ வைத்தியக்குழுவின் இணைப்பதிகாரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ் கதிரவேற்பிள்ளையிடம் புகார் செய்துள்ளார்.

இப்பிரான்ஸ் வைத்தியக் குழுவினர் தங்கும் வீட்டுக் கூரை மேல் இச்சூரிய மின் குமிழ்கள் இரவில் எரிந்து கொண்டிருப்பதால்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இயக்கச்சியில் நேபாம் குண்டு சந்தைப்பகுதி தீயில்

இயக்கச்சிப் பகுதியில் விமானப்படையினரின் 'வை - 12' குண்டுவீச்சு விமானம் தொடர்ந்து வீசிய குண்டுகளினால் இயக்கச்சி கிறிஸ்தவ தேவாலயமும் இயக்கச்சி கனிஷ்ட மகாவித்தியாலயமும் பாரிய சேதமடைந்துள்ளன.

அப்பகுதியில் அமைந்துள்ள பல வீடுகளும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

— 4 ஆம் பக்கம் பார்க்க

யாழ் பல்கலைக்கழகத்தில்

## பதிவு செய்யும் விண்ணப்பங்கள் காலதாமதமாக ஏற்கப்படும்

யாழ் பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்களைப் பதிவு செய்யும் விண்ணப்பங்கள் காலதாமதமாக வந்தாலும் அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அலுவிகார யாழ் பல்கலைக்கழக உபவேந்தருக்கு அறிவித்துள்ளார்.

புதிய மாணவர்கள் தம்மைப் பதிவு செய்வதற்கு

— 4 ஆம் பக்கம் யார்க்க

## 14 ஆம் திகதி முதல் 22 வரை 139 போராளிகள் வீரமரணம்

14 ஆம் திகதியன்று மோதவில் 139 வேங்கைகளின் வீரமரணம் பற்றி நேற்று வெளியான செய்தி தவறு என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 14ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை நடைபெற்ற இரு முனை மோதல்களில் வீரமரணம் அடைந்த 139 மாவீரர்களின் விவரங்களே நேற்று வெளியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

மந்திகை ஆஸ்பத்திரியில்

## சீருடை அணியாத ஊழியர்களுக்கு எச்சரிக்கை

மந்திகை ஆஸ்பத்திரிக்குத் திடீர் விஜயத்தை மேற்கொண்ட சுகாதார அத்தியட்சகர் ஊழியர்கள் சிலர் கடமையின் போது சீருடை அணிந்திருக்காததை அவதானித்தார்.

இவர்களைக் கடுமையாக எச்சரித்த அத்தியட்சகர் இனிமேல் இவ்வாறு நடந்து கொள்ளும் ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

ஆஸ்பத்திரி நடவடிக்கைகளையும், இராணுவ நடவடிக்கைகளால் காயமடைந்து சிகிச்சை பெறுபவர்களையும் அவர் பார்வையிட்டார். 15

## புலிகள் குறித்து இந்தியாவின் நிலைப்பாடு அறிவதற்கு ஹேரத் புதுடில்லி விஜயம்!

இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரல்ட்ஹேரத் இன்று புதுடில்லி பயணமாகிறார். இவர் பிரதமர் நரசிம்மராவ் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர், அதிகாரிகள் ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.

ஹேரத்தின் புதுடில்லி விஜயம், புதிய இந்திய அரசு விடுதலைப்புலிகள் தொடர்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இலவசம்

கீரை பயிரிடுவது சுலபம், பலன் கிட்டுவது விரைவில், கீரைவிதைகள் தேவைப்படுவோர் அஞ்சல் முத்திரை ஒட்டிய சுய விலாசமிட்ட காகித உறை மில்க்வைற் தொழிலகத்திற்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மேலும் நீடிப்பு

அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது

நீடிப்புப் பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்பட்ட சமயம் நீடிப்புக்கு ஆதரவாக 121 உறுப்பினர்களும், எதிராக 42 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

# யுத்தம்பற்றிய விவரங்களை வெளியிடப் பிரதமர் மறுப்பு!

ஆனையிறவு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி பகுதிகளில் விடுதலைப்புலிகளுடன் இடம் பெற்றுவரும் யுத்தம்பற்றிய விவரங்களைப் பகிரங்கமாக வெளியிட பிரதம மந்திரியும் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சருமான டி. பி. விஜேதுங்க மறுத்துள்ளார்.

அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்பட்ட சமயம் ஆனையிறவு மோதல் தொடர்பான விவரங்களையும், இராணுவத்தினரின் முன்னேற்றம் பற்றிய தகவல்களையும் தருமாறு பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரதமரிடம் அங்கு கோரிக்கை விடுத்தனர்.

எனினும் அவர்களின் கோரிக்கைக்குப் பதிலளிக்க அவர் அங்கு மறுத்துவிட்டார். ஆனையிறவு யுத்தம் பற்றிய தகவல்களைத் தெரிவிக்க முடியாது என அப்போதுபிரதமர்தெரிவித்தார்.

இராணுவத்துக்கு வேண்டிய அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாக மட்டும் அவர் அங்கு தெரிவித்தார்.

ஆனையிறவிலும் கட்டைக்காடடுப் பகுதியிலும் இராணுவம் முன்னேறி வருவதாக அரசு கடந்த சில வாரங்களாக வானொலி மூலமும், ஏரிக்கரைப் பத்திரிகைகள் மூலமும் தொடர்ச்சியாகப் பிரசாரம் செய்துவந்தது.

ஆனால் பாராளுமன்றத்தில் அது பற்றிய விவரங்களை வெளியிடப் பாதுகாப்பு அமைச்சர் தற்போது மறுத்துள்ளமை இந்த மோதலில் இராணுவம் பின்னடைவை அடைந்துள்ளதையும், அடைந்து வருவதையுமே காட்டுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## வயோதிபர் பலி

பூநகரி விநாசியோடையைச் சேர்ந்த சின்னப்பு பொன்னம்பலம் என்பவர் மண்ணித்தலைக் கடலில் வீழ்ந்து மரணமானார்.

அரியாலை முனங்குகரையில் ஐந்து தினங்களின் பின்னர் இவரது சடலம் கரையொதுங்கிமீட்கப்பட்டதுப35

## அம்பனுக்கு இடமாற்றம்

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வடமராட்சி கிழக்கில், இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கையினால் மருதங்கேணியிலிருந்து அம்பனுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. 50

## விதைகள் தேவை

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு(T. R. R. O) பின்வரும் விதைகள் தேவைப்படுகின்றன. இவற்றை விநியோகிக்கக்கூடிய விதைக் கமக்காரர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்

தேவைப்படும் விதைகள்:-

பாசிப்பயறு, கௌபி, குரக்கன், எள்ளு, வெண்டி., கத்தரி, நீளப்பயிற்றை, பாகல், புடோல், தக்காளி.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

செயலாளர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (T. R. R. O.)
106, நாலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

07107

யாழ்ப்பாண மாநகர சபை

## தற்காலிக பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாநகர சபையில் பின்வரும் பதவிகளை **தற்காலிக அடிப்படையில்** நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

01. பொது சுகாதாரப் பரிசோதகர்கள் (PHI) (தற்காலிகம்)
02. பொது சுகாதார சாரணிகள் (PHN) (தற்காலிகம்)
03. குடும்ப நல சேவையாளர்கள் (மருத்துவ மாதுக்கள் PHM) (தற்காலிகம்)
04. நூலக உதவியாளர்கள் (தற்காலிகம்)
05. வேலை மேற்பார்வையாளர்கள் (தற்காலிகம்)
06. தொழிலாளர்கள் (வீதிவேலை) (தற்காலிகம்)

மேற்படி பதவிகளுக்குரிய தகைமைகளுட்பட சகல விபரங்களையும் நல்லூர் பண்டாரமாளிகை வளவிலுள்ள மாநகர சபை அலுவலகத்திலும், கச்சேரிக்கு அண்மையிலிருக்கும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும், சுண்டிக்குளி, நாச்சிமார் கோவிலடி கிளை நூலகங்களிலும், நல்லூர் இந்துவிடுதியிலுள்ள விளம்பரப் பலகையிலும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 05. 08. 1991**

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
24. 07. 91.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

07104

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 05 — 12 — 1959



அழிப்பு: 07 — 08 — 1990

வ. வரததாசன்
(இலங்கை வங்கி ஊழியர்)
திதி: 27 - 07 - 1991

வருடம் ஒன்று போயினதே வான்கலந்து! வளர்வீரம்
புருஷனாகச் சென்றீர்! நாம் போகுமிடம்தெரியவில்லை
உருவமது எம்முயிரில் ஒன்றிவிட்டபோதினிலே
வருகை தரும் நன்னாளை வரவேற்கக் காத்திருப்போம்

23, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு.
யாழ்ப்பாணம்.

நினைவுகளில் கலந்துவாழும்
மனைவி நிர்மலா,
அக்காமார், அத்தான்மார், மருமக்கள்

07098

## உறுப்பினர்க்கு அவசர அழைப்பு

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் இயங்குகின்ற அனைத்து மன்றங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்கும் வகுப்புப் பிரதிநிதிகளுக்குமான கூட்டமொன்று இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்குத் தொழில் நுட்பக் கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் என மாணவர் அவைத் தலைவர் அறிவித்துள்ளார்

## நோயாளர் அதிகரிப்பு

அம்பன்அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் தொகை கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது.

கடற்பீரங்கித்தாக்குதலால் சேதமடைந்த மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை மூடப்பட்டதையடுத்தும், வடமராட்சி கிழக்கில் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்ததையடுத்துமே இவ் வைத்திய சாலையில் நோயாளர்களின் தொகை அதிகரித்துள்ளது. 50, ப-36

## சனிக்கிழமையும் வங்கி இயங்கும்

இலங்கை வங்கிக் கிளைகளில் சாவகச்சேரிக் கிளை தவிர மற்றைய சகல கிளைகளும் சனிக்கிழமைகளில் 1 மணிநேரம் இயங்கவுள்ளது.

இலங்கை வங்கிக் கிளைகள் இனிமேல் வாடிக்கையாளர் நன்மை கருதி சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் 10 மணிவரை இயங்கவுள்ளதாக இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார் 74


## சிறு விளம்பரம்

### வைத்தியம்

சகல விதமான நாட்பட்ட நோய்களுக்கும் ஹோமியோபதி வைத்திய சிகிச்சை நிரந்தர நிவாரணம் அளிக்கின்றது. டாக்டர் எம். வி. தில்லை சந்திரன், 218/5 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். 07105

### திருமணம்

எம்மிடம் மணமக்கள் நிறைய இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் சந்திக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம்,யாழ்ப்பாணம் 07106


## 'யாகம் தொடங்கிவிட்டோம்...'

களத்தில் போராடி வரும் போராளிகளுக்கு வெற்றி, ஆசிவேண்டியும் காயமடைந்த போராளிகள் விரைவில் குணமடைய வேண்டியும், வீரமரணமடைந்த மாவீரர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டியும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் தற்பொழுது இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்களில் தொடர்ந்து விசேட ஆராதனைகள் இடம்பெற்று வருவதாக எமது நிருபர்கள் அறிவிக்கிறார்கள்.

### பனிப்புலத்தில்....

பனிப்புலம் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்த வேங்கைகளுக்கு ஆத்மசாந்தி வேண்டியும், காயமடைந்த வீரவேங்கைகள் பூரண சுகமடைய வேண்டியும், போர்க்களத்தில் போராடி வரும் வீரவேங்கைகளுக்கும் ஆத்ம பலம் வேண்டியும் விசேட அபிஷேகம், ஆராதனை என்பன நடைபெறவுள்ளன (13, 37)

### சாவகச்சேரியில்....

சாவகச்சேரி செருக்கல்பதி சித்திவிநாயகர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை போராளிகளின் வெற்றிக்காகவும்,இறந்த மாவீரர்களின், ஆன்மசாந்திக்காகவும் காயமடைந்த வீரர்களின் உடல் நலம் வேண்டியும், விசேட அபிஷேக ஆராதனைகள் காலை 9மணிக்கு நடைபெறவுள்ளன.

### மிருசுவிலில்....

தமிழீழ மண்மீட்புப் போரில் இதுவரை வரலாறு கண்டிராத யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளிற்கு ஆசி வெற்றி வேண்டி மிருசுவில் துர்க்காபுரம் ஞானதுர்க்கை அம்மன் ஆலயத்தில் 29ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு விசேட அபிஷேகம் பூஜை என்பன இடம்பெறவுள்ளன.

### நல்லை ஆதீனத்தில்....

காரைநகர் மணிவாசகர் சபையினர் நாட்டின் நலன் கருதி "ஓம் சாந்தி" பிரார்த்தனை வழிபாடு ஒன்றை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8. 30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் திரு செ. தேவதாசன் தலைமையில் நடத்தவுள்ளார்கள்

### சங்கானையில்....

ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதலின் போது வீரமரணமடைந்த வீரவேங்கைகளுக்கு ஆத்ம சாந்தி வேண்டியும், காயமடைந்தவர்கள் பூரண சுகமடைய வேண்டியும் போர்க்களத்தில் மண்மீட்புக்காக தீரமுடன் போராடும் வீரவேங்கைகளுக்கு ஆத்ம பலம் வேண்டியும் சங்கானை வெல்வில் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இன்று சனிக்கிழமை சங்காபிஷேகம், லட்சார்ச்சனை, விசேட வழிபாடு என்பன நடைபெறவுள்ளன. (13)

### தென்மராட்சியில்...

ஈழத் தமிழரின் இன்னல் தீரவும் இலங்கை அசுரவர்க்கத்தின் ஆட்சிப் பிடியிலிருந்து விலகி தனித் தமிழ்ஈழத்தை அமைக்க களத்தில் போராடும் போராளிகளின் நலன் கருதியும் தென்மராட்சி ஆலயங்கள்தோறும் அகண்ட நாமப் பிரார்த்தனை நடைபெற்றுவருகிறது.

### கைதடியில்....

போராளிகளின் வெற்றிக்காகவும், போரில்காயமடைந்தவர்களின் உடல் நலத்துக்காகவும் வீரமரண மடைந்த மாவீரர்களின் ஆத்ம சாந்திக்காகவும் கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு விசேட அபிஷேகம், பூசைகள், ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

★ சபையில் அமைச்சர் முதற்தடவையாக ஒத்துக்கொள்கிறார்

# ஸ்ரீலங்கா படையினரை எதிர்த்து புலிகள் நேருக்குநேர் போர்!

ஆனையிறவு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி பகுதிகளில் தற்போது நடைபெற்று வரும் யுத்தத்தில் ஸ்ரீலங்காப் படையினருடன் விடுதலைப்புலிகள் நேருக்கு நேர் மோதி வருவதாக பாராளுமன்றத்தில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்காப் படையினருடன் நேருக்கு நேர் மோதுவதை அமைச்சர் ஒருவர் பாராளுமன்றத்தில் ஒத்துக் கொண்டுள்ளமை இதுவே முதற் தடவை என்பது இங்குகுறிப்பிடத்தக்கது.

புலிகள் படையினரை மறைந்திருந்து தாக்குகிறார்கள் என்ற வழமையான பிரசாரத்தை தொடர்ந்தும் மேற்கொள்ள முடியாத நிலை தற்போது அரசுக்கு ஏற்பட்டுள்ளதையே இது எடுத்துக் காட்டுவதாகஏஜன்ஸிச்செய்தி விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## புலிகளைக் கட்டுப்படுத்த இலங்கைக்கு இந்தியா தாராளமாக உதவுகிறதாம்

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இந்தியா பெருமளவிலான உதவிகளை இலங்கைக்கு தற்பொழுது வழங்கி வருவதாக பாராளுமன்ற உறுப்பினரான நிமால்ஸ்ரீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனான உறவுகளை மேலும் பலப்படுத்தி, அதிக உதவிகளைப் பெற இச்சந்தர்ப்பத்தை அரசு நன்கு பயன் படுத்திக்கொள்ள வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

## தெற்கில் புனித பகுதிகளிலும் குண்டு வெடிக்கலாமென அச்சம்

கதிர்காமத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவ்வாறே கண்டி புனித நகர்ப் பகுதியிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம் பெற்றது போன்ற குண்டுவெடிப்பு இந்தப் புனித பகுதிகளிலும் தொடரலாமென அஞ்சப்படுவதே பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டமைக்கு காரணமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பரிசோதனை செய்யப்படாத இறைச்சி விற்கத் தடை!

சுகாதார பரிசோதனைக் குழுவினால் பரிசோதிக்கப் படாது முத்திரையிடப்படாத இறைச்சியை விற்பனை செய்வதற்கு நல்லூர் பொதுச் சுகாதாரப்பரிசோதகர் தடை விதித்துள்ளார்.

திருநெல்வேலிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ப் பரிசோதனையில் முத்திரையிடப்படாது விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த இறைச்சி கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது. (13)

## தற்கொலைப் படைமூலமே அமைச்சர் ரஞ்சன்பலியானாராம்

முன்னாள் பாதுகாப்பு இணையமைச்சர் ரிமோட் கன்ரோல் மூலம் இயங்கும் வெடிகுண்டினால் கொல்லப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெடி மருந்து ஏற்றப்பட்ட கார் ஒன்றை அமைச்சரின் காரின் பக்கவாட்டில் மோதியேதற்கொலைப்பாணியில் கொல்லப்பட்டார் என அவர்கள் தற்போது கூறியுள்ளனராம்.

## 15பேருக்குதொழுநோய்அறிகுறி; சிகிச்சைக்கு விசேட ஏற்பாடு

சுழிபுரம் மேற்கு காட்டுப் புலம் கிராமத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தொழு நோய் ஆய்வின் போது 15 பேருக்கு தொழு நோயின் ஆரம்ப அறிகுறிகள் இருப்பது கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

இதனை அடுத்து இவர்கள் சிகிச்சை பெறுவதற்கு வசதியாக காட்டுப்புலம் சனசமூக நிலையத்தில் சிகிச்சை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ் பிராந்திய தொழு நோய் தடுப்பு அதிகாரி அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது திங்கட்கிழமையன்று காலை 7 மணி முதல் 9 மணி வரை இந்த நோயாளர்கள் இங்கு சிகிச்சை பெறலாம் என்றும், தொல்புரம் அரசினர் மருந்தகத்திலும் இதே தினத்தில் வழமைபோல சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (13)

## ஆஸ்பத்திரி தொழிலாளர் நியமனம்; 2ஆம் திகதி நேர்முகப் பரீட்சை

யாழ்பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் இயங்கும் அரசாங்க வைத்தியசாலைகளில் சுகாதார தொழிலாளர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

ஏற்கனவே இப்பதவிக்கு விண்ணப்பித்திருந்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தெரிவுசெய்யப்படுபவர்கள் யாழ் மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு நியமனம் செய்யப்படுவார்கள். (13)

## தையல் பயிற்சி நிலையம்

யாழ் தொழில் திணைக்களம் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புலோலியில் தையல் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. இத்தையல் பயிற்சி நிலையத்தில் இப்பகுதியைச் சேர்ந்த படித்த 25 யுவதிகளுக்குத் தையல் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. தொழில் திணைக்களத்தின் நடமாடும் தையல் பயிற்சி நிலையத் திட்டத்தின் கீழ் பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் இத்தையல்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (15)

## படையினருக்கு நவீன ஆயுதங்கள் மேலும் தேவை என்கிறார் லக்ஷ்மன்

ஆனையிறவு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஸ்ரீலங்காப்படையினருக்கு மேலும் அதிநவீன ஆயுதங்கள் வழங்கப்படவேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் ஜெயக்கொடி அரசைக் கோரியுள்ளார்.

பாராளுமன்றத்தில் அவர் உரையாற்றுகையில் நவீன ஆயுதங்கள் வழங்கிப் படையினரைப் பலப்படுத்தினால் புலிகளுடனான யுத்தத்திற்கு முடிவுகாணலாமெனவும் தெரிவித்துள்ளார்.

## 50ஆயிரம் தேசிக்காய் கன்றுகள் ஐப்பசியில் விற்பனைக்கு வரும்

திருநெல்வேலி அரசினர் மாவட்ட விவசாயப் பண்ணையில் ஐம்பதினாயிரம் தேசிக்காய்க்கன்றுகள் பாவனையாளரின் நலன் கருதி உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

யாழ்மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர், கருணாரத்தினத்தின் இந்த முயற்சி பலனளித்துள்ளதாகவும், எதிர்வரும் ஐப்பசி மாதத்தில் இந்த நல்லின தேசிக்காய்க் கன்றுகள் விநியோகிக்கப் படவிருப்பதாகவும் விவசாயப்பண்ணை வட்டாரங்கள் தெரிவித்தன. (33)

தொடர் : 4

# ஆனையிறவு

— 'அரவிந்தன்'

கள்வாய்ப் பிடிப்பவர்கள் தண்டிக்கப்பட்டனர். உடுப்பிட்டித் தனக்காரர்கள் தங்களது நிலங்களுக்குச் செலுத்த வேண்டிய வரிக்காக, வருடா வருடம் 2 கொம்பில்லாத யானைகள் தருவதாக ஒப்புக் கொண்டனர். வன்னிச் சிற்றரசர்கள் வருடா வருடம் யானைகளைத் திறையாகச் செலுத்த ஒத்துக் கொண்டனர். திறையாகவும், வரியாகவும் வரும் யானைகளையும், மேலதிகமாக அரசாட்சியாளரால் பிடிக்கப்பட்ட யானைகளையும் ஆனையிறவூடாக நடாத்தி வந்து, முகாவில் எனும் இடத்தில் யானைக் கொட்டில் ஒன்று அமைத்து எட்டு நாட்கள் வரை கட்டி அவை ஆரோக்கியமாக உள்ளனவா எனப் பார்த்ததன் பின்னரே, யாழ்ப்பாணச் சந்தைக்கு அழைத்துச் சென்றனர்.

கி பி. 1658 ஆம் ஆண்டு மன்னாரில் இருந்த போர்த்துக்கேயரின் கோட்டையை ஒல்லாந்தர் கைப்பற்றிக்கொண்டனர் அவர்களின் படை தரைமார்க்கமாக யாழ்ப்பாணம் நோக்கி வருவதை அறிந்த, போர்த்துக்கேயப் பட்டாளம் ஒன்று, ஆணையிறவில் அவர்களை எதிர்த்து முறியடிப்பதற்காகக் காத்திருந்தது. ஆனால் ஒல்லாந்தரின் படை பூநகரிக்கடலைக் கடந்து சாவகச்சேரிக் கரையை அடைந்தது. யாழ்ப்பாணம் கோட்டையை முற்றுகையிட்டது. மூன்றுமாத கால முற்றுகையின் பின்னர், யாழ்ப்பாணக் கோட்டை ஒல்லாந்தர் வசமாகியது அதனையடுத்து ஆனையிறவு. இயக்கச்சி, வெற்றிலைக்கேணி ஆகிய மூன்று கோட்டைகளிலும் தங்கியிருந்த பறங்கிப்படையினர், ஒல்லாந்தப் படையிடம் எதுவித எதிர்ப்புமின்றிக் கோட்டைகளை ஒப்படைத்துச் சரணடைந்தனர்.

இக்கோட்டைகளை ஒல்லாந்தர் செப்பனிட்டனர். இந்த மூன்று கோட்டைகளிலும் 59 வீரர்கள் முகாமிட்டிருந்தனர். இவர்களில் 11வீரர்கள் ஒல்லாந்தர் ஆவர். 45 வீரர்கள் துப்பாசிகள்; 3 வீரர்கள் மெஸ்றிசியர்கள் ஆவர் போர்த்துக்கேயருக்கும் சுதேசிகளுக்கும் பிறந்தவர்கள் துப்பாசிகள் எனப்பட்டனர். ஒல்லாந்தருக்கும் சுதேசிகளுக்கும் பிறந்தவர்கள் மெஸ்றிசியர்கள் எனப்பட்டனர்.

ஒல்லாந்தர் காலத்தில், யாழ்ப்பாண ஆட்சியாளருக்கும், வன்னிச் சிற்றரசர்களுக்கும் இடையில் ஓரளவு பகைமை நிலவியது. வன்னிச் சிற்றரசர்கள் வருடா வருடம் போர்த்துக்கேயருக்கு 43 யானைகளும், 125 திராந்திகளும் திறையாகச் செலுத்தி வந்தனர். அதே போன்று தங்களுக்கும் திறையிறுக்க வேண்டுமென ஒல்லாந்தர் வற்புறுத்தினர் எனினும், ஒல்லாந்தரால் எதிர்பார்த்தளவு வன்னியர்கள் இலகுவில் திறை செலுத்தவில்லை. வற்புறுத்தின் அவர்கள் கண்டி மன்னனுடன் சேர்ந்து விடுவார்கள் என்ற பயமும் ஒல்லாந்தருக்கு இருந்தது. கண்டி மன்னன் வன்னியருடன் சேர்ந்து தம் மீது படையெடுக்கக் கூடும் என ஒல்லாந்தர் உள்ளூரப் பயந்ததால் ஆனையிறவுத் தடைமுகாம் பாதுகாப்பினைப் பலப்படுத்தினர். ஐயத்துக்குரியோரைத் தடுத்து வைத்தனர். ஆனையிறவூடாகக் கண்டி சென்று வரும் பொதிமாட்டு வியாபாரிகளிடம் கண்டி இராச்சிய இரகசியங்களை அறிந்து கொள்ள முயன்றனர். அதற்கு ஈடாகப் பாக்கு, மிளகு வரிகளில் பொதிமாட்டு வியாபாரிகளுக்குச் சலுகை காட்டினர்; புகையிலையைக் கண்டிக்கு உத்தரவுச் 'சீட்டின்றி எடுத்துச் செல்லவும் அனுமதித்தனர் எனினும், ஊடுபோக்கு வரி தொடர்ந்து நடைமுறையில் இருந்தது.

ஆனையிறவு, பைல், பெஸ்சூற்றர் ஆகிய மூன்று இடங்களிலும் ஒல்லாந்தர் தமது கண்காணிப்பினை அதிகரிக்க நேர்ந்தது. இந்த ஊடுபோக்குகள் ஊடாகப் பருத்திப் பஞ்சு, புடைவை, மிளகு, பாக்கு, புகையிலை என்பன கள்ளமாகக் கடத்தப்பட்டன. சிங்களப் படையெடுப்பு கண்டியிலிருந்து நிகழலாம் என்ற பயம் இருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து அடிமைகளைக் களவாகக் கடத்திச் செல்லாமலும் அந்த அடிமைகள் தப்பி வன்னிப் பகுதிகளுக்குச் சென்று விடாமல் தடுப்பதும் அவசியமாயிற்று. எனவே இந்த மூன்று இடங்களினூடாகப் போய் வருபவர்கள் (உத்தரவுப் பயணச் சீட்டு Pass) பெற வேண்டுமென சட்டமியற்றப்பட்டது இந்தப் பயணச் சீட்டுக்கள் ஈர்க்கற்ற பனையோலைத் துண்டுகளில் எழுதப்பட்டன. அவற்றைப் பெறாது ஆனையிறவை எவரும் கடக்க முடியாது. ஆனால், பிறதேசப் பிரயாண உத்தரவுச் சீட்டுக்களும், மற்ற அதிகாரச் சீட்டுக்களும் ஈர்க்குள்ள பனையோலைகளில் எழுதி வழங்கப்பட்டன.

இவ்வாறு பயண உத்தரவுச் சீட்டுடன் செல்லும் பிரயாணிகள் தாம் கொண்டு செல்லும் பொருள்களுக்குத் தீர்வையிறுக்க நேர்ந்தது. அத்தீர்வை வித்தியாசமானது. வன்னிக்குச் சென்று வருபவர்கள் ஆனையிறவில் ஒரு ஆளுக்கு நான்கு பாக நீளமுள்ள மரநார்க் கயிறு தீர்வையாகச் செலுத்த வேண்டும். அவர்கள் தம்முடன் மாடுகளைக் கொண்டு வந்தால், கொண்டு வரும் ஒவ்வொரு மாட்டிற்கும் நான்கு பாகமுள்ள மரநார்க்கயிறு ஆயவரியாகக் கொடுக்க வேண்டும். வன்னிக்கு வேளாண்மைக்குச் செல்பவர்களும் இவ்வாறு கயிறு வரி செலுத்த வேண்டும். வரியாக அறவிடப்பட்ட கயிறுகள் நாகபட்டினத்திற்கு ஏற்றுமதியாகின.

ஒல்லாந்தரின் ஆனையிறவுப் பட்டாளத்துக்கு தண்ணீர் சுமந்து வழங்குகின்ற கட்டாய சேவை பச்சிலைப் பள்ளியைச் சேர்ந்தவர்களுக்குரியதாக இருந்தது. கட்டாய ஊதிய முறை ஒல்லாந்தர் காலத்தில் வழக்கிலிருந்தது. ஒவ்வொருவரும் மாதம் ஒரு நாள் வேலை செய்ய நேர்ந்தது. ஆனையிறவில் மரந்தறிக்கவும், பட்டாளத்திற்குத் தண்ணீர் சுமக்கவும் பச்சிலைப்பள்ளி மக்கள் பயன்படுத்தப்பட்டனர். முறை தவறின், மூன்று நாள்கள் தண்டமாக வேலை செய்ய நேர்ந்தது.

1795, செம்டம்பர், 28 ஆந் திகதி எவ்வித உயிர்ச்சேதமுமின்றி, ஒருவித பிரயாசையுமின்றி, யாழ்ப்பாணக் கோட்டையை ஒல்லாந்த்ர் ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தனர். ஆனையிறவு, பைல், பெஸ்சூற்றர் கோட்டைகளும் ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டன. 1803 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கும் கண்டியரசனுக்கும் இடையில் யுத்தம் மூண்டது.

(வளரும்)

★ உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கேள்வி

# சண்முகம் தப்பியோடிய போது

# ஏன் துப்பாக்கிச்சூடு நடத்தவில்லை?

ராஜீவ் கொலையில் முக்கிய சந்தேக நபரான சண்முகம் மரணமானது குறித்து நேற்று இராஜ்யசபாவில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் பதிலளித்தார்.

சண்முகம் மரணம் குறித்து விவாதிக்க அவையில் இன்று தனியான நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

சண்முகத்தின் மர்ம மரணம் குறித்து விளக்கமளித்த அமைச்சர் சவான் ''மரணத்துக்கு பொறுப்பான காவலதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இது குறித்து மேலதிக விசாரணை நடாத்த புலனாய்வுக் குழுவின் மேலதிகாரி சென்னை சென்றுள்ளார்'' என்றார்.

சம்பவதினம் இரவு சண்முகம் எவ்வாறு காவலில் இருந்து தப்பிக் காட்டுக்குச் சென்றார் எனக் கேள்வி எழுப்பிய அமைச்சர், அப்போது ஆயுதபாணிகளாக இருந்த பொலிஸார் ஏன் அவரை துப்பாக்கிச்சூடு நடாத்தியாவது தடுக்க முயற்சிக்காமல் விட்டனர் எனச் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து அதிகாரிகளின் விளக்கம் தமக்கு திருப்திதரவில்லை எனவும், சண்முகம் தூக்கில் தொங்குவதற்கு தேவையான கயிறு எப்படிக் கிடைத்தது எனவும் சவான் குறிப்பிட்டார்.

இதேவேளை ராஜீவ் கொலை குறித்து விசாரிக்க மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட நீதிபதி வர்மா குழு மேற்கொண்டும் விசாரணைகளை நடாத்த மறுத்துவிட்டதாகவும் சவான் புதியதோர் தகவலை வெளியிட்டார்.

## பிரதமர் விஜயம் ரத்து

தமிழகத்திற்கு இன்று விஜயம் செய்யவிருந்த இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் கடைசி நேரத்தில் தனது விஜயத்தை ரத்துச் செய்தார்.

பயணம் ரத்துச் செய்யப்பட்டதற்கான காரணம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

## புலிகள் குறித்து ..

பாக என்னநிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதை அறியவே ஏற்பாடு செய்யப்பட்டதாக பி. பி. ஸி நேற்றுக் குறிப்பிட்டது.

இதேவேளை தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் குறித்தும் இலங்கையின் மலையகத்தில் உள்ள இந்திய பிரஜாவுரிமை பெற்றவர்கள் குறித்தும் அமைச்சர்ஹேரத்பேச்சுநடாத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி நான்கு வருடங்கள் பூர்த்தியாகும் இக்கட்டத்தில் அமைச்சர் ஹேரத் இந்தியா செல்வது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

## பிரான்ஸ்..

விமானப் படையினர் அடையாளம் காணமுடிகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மின் குமிழ்கள் திருடப்பட்டதால் தமது பாதுகாப்புக்கு இடைஞ்சல் ஏற்பட்டுள்ளதாக பிரான்● வைத்தியக்குழு இணைப்பதிகாரி தெரிவித்தார். (15)

## தமிழீழ...

உதவும் வண்ணம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது

இச் சேகரிப்பில் ஈடுபடும் மாணவ இயக்கத்தினருக்கு வட்டவை, சிற்றூரவை உறுப்பினர்களும், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திக் கழகங்கள், தொழிற் சங்கங்கள் போன்ற பொது நிறுவனங்களும் முழு ஒத்துழைப்பை வழங்குமாறும் வேண்டப்படுகின்றனர்.

இவற்றை விட பதுங்கு குழி, காவல் அரண்களுக்கான சாக்கு, மண்வெட்டி போன்ற ஏனைய பொருள்களைச் சேகரிப்பதில் வட்ட அவை, சிற்றூரவை உறுப்பினர்களும், பொது நிறுவனங்களும் கூடியகவனம் செலுத்தி ஈடுபடுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## புலிகள்

சிங்க, ''புலிகளுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிதான் நிதி உதவி வழங்கி வந்துள்ளது. கைது செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணித்தலைவர் சந்திரசேகர் இதனை விசாரணையின் போது வெளியிட்டுள்ளார். இவர் மூலமாகவே சுதந்திரக்கட்சி புலிகளுக்கு ஆதரவை நல்கியது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற தென்னிலங்கை அன்னையர் முன்னணிக் கட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ புலிகள் தொடர்பாக பேசியதை நாம் அறிவோம்'' எனச்சாடினார்

## இயக்கச்சியில்...

இயக்கச்சிப் பகுதியில் நேபாம்குண்டுகள்தொடர்ந்து வீசப்பட்டு வருவதினால் இயக்கச்சி சந்தைப்பகுதி எரிந்து கொண்டிருக்கின்றது.

பல கட்டிடங்களும் வீடுகளும் எரிந்து கொண்டிருக்கின்றன. (43)

## பதிவு செய்யும்...

தபால் மூலம் தமது விண்ணப்பங்களை அனுப்பலாம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்துள்ளது தெரிந்ததே.

ஊரடங்குச் சட்டம் தபால் சேவை சீரின்மை போன்ற காரணங்களினாலேயே இவ்வாறு தாமதமாக வரும் விண்ணப்பங்களைப் பதிவு செய்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனால் தூர இடங்களில் உள்ள மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்து அலையத் தேவையில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. (38)

## பரீட்சைகள் நடைபெறும்

க. பொ த. உயர்தர 1991 பரீட்சையை தொடர்ந்து க. பொ. த. சாதாரண தர 1990 விசேட பரீட்சை நடைபெறும் என கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (74)

## புதிதாக...

யவருகின்றது.

கடந்த மூன்று தினங்களாக எவ்வித தாக்குதலிலும் படையினர் ஈடுபடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.43,18

## இறமையற்ற...

பாதிக்கலாம் தொடர்ந்தும் பல இழப்புகளுக்கும் இது வழிவகுக்கலாம் எனவும் அப் பத்திரிகை குறிப்பிட்●ள்ளது.

தற்போதைய ஆனையிறவு போர்தொடர்பானவிவரணத்திலேயே இக்கருத்தை அப் பத்திகை வெளியிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-12)

## க. பொ. த. உயர்தர 1991 நேர அட்டவணை

| காலை | | மாலை | |
|---|---|---|---|
| 03-8-91 | | | |
| 8-30—11:30 | விலங்கியல் I | 12-30—15-30 | சரித்திரம் I |
| ,, ,, | பிரயோக கணிதம் I | | |
| ,, ,, | சரித்திரம் II | | |
| 05-8-91 | | | |
| 8-00—11-30 | பிரயோக கணிதம் II | 12 30—15-30 | மனைப்பொருளியல் I |
| ,, ,, | விலங்கியல் II | ,, ,, | லத்தின் I |
| ,, ,, | இரேக்க/உரோம நாகரிகம் I | | |
| ,, ,, | சித்திரம் I | | |
| 06-08-91 | | | |
| 8-30—11-30 | தூய கணிதம் I | 12-30—15-30 | மனைப் பொருளியல் II |
| ,, ,, | பௌத்த நாகரிகம் I | ,, ,, | லத்தின் II |
| 07-8-91 | | | |
| 8-30—10-30 | தாவரவியல் I | 11-30—15-30 | தூயகணிதம் II |
| 8-30—11-30 | புத்த சமயம் I | ,, ,, | பௌத்த நாகரிகம் II |
| ,, ,, | தமிழ் I | | |
| 08-8-91 | | | |
| 8-30—11-30 | தாவரவியல் II | 12-30—15-30 | சங்கீதம் I |
| ,, ,, | புத்த சமயம் II | ,, ,, | கர்நாடகம் |
| ,, ,, | தமிழ் II | ,, ,, | சங்கீதம் I |
| | | ,, ,, | மேலைத்தேயம் |
| 09-8-91 | | | |
| 8-30—10-30 | இரசாயனவியல் I | 12-30—15-30 | பரத நாட்டியம் I |
| 8-30—11-30 | பொருளியல் I | | |
| 10 8-91 | | | |
| 8-30—11-30 | இரசாயனவியல் II | 12-30—15-30 | சங்கிதம் II |
| ,, ,, | நாட்டியம், பரதம் II | | |
| 12-8-91 | | | |
| 8-30—10-20 | பௌதிகவியல் I | 12-30—15-30 | விவசாய விஞ்ஞானவியல் I |
| 8-30—11-30 | கணக்கியல் I | | |
| 13-3-91 | | | |
| 8-30—10-30 | பௌதிகவியல் II | 12-30—15-30 | விவசாய விஞ்ஞானவியல் II |
| 8-30—11-30 | கணக்கியல் II | | |
| 14-8-91 | | | |
| 8-30—11-30 | பொருளியல் II | | |
| 15- 08- 91 | — | 12-30—15-30 | இந்துசமயம் I |
| | | ,, ,, | இறிஸ்தவம் I |
| | | ,, ,, | சமஸ்கிருதம் I |
| 16-08-91 | | | |
| 8-30—11-30 | சித்திரம் II | 12-30—15-30 | இந்துசமயம் II |
| ,, ,, | ஆங்கிலம் I | ,, ,, | கிறிஸ்தவம் II |
| | | ,, ,, | சமஸ்கிருதம் II |
| 17- 08- 91 | | | |
| 8-30—11-30 | சித்திரம் III | 12-30—15-30 | வர்த்தகமும் நிதியும் I |
| ,, ,, | ஆங்கிலம் II | | |
| 19- 08- 91 | | | |
| 8-30—11-30 | புவியியல் I | 12-30—15-30 | வர்த்தகமும் நிதியும் II |
| 20-08-91 | | | |
| 8-30—11-30 | புவியியல் II | 12-30—15-30 | இந்துநாகரிகம் I |
| 21-08-91 | | | |
| 8-30—11-30 | புவியியல் III | 12-30—15-30 | இந்துநாகரிகம் II |
| 22-08-91 | | | |
| 8-30—11-30 | அரசியலும்மூலதத்துவமும் I | 12-30—15-30 | அளவியலும் விஞ்ஞான முறையும் I |
| 23-08-91 | | | |
| 8-30—11-30 | அரசியலும்மூலதத்துவமும் II | 12-30—15-30 | அளவியலும் விஞ்ஞான முறையும் II |
| 26-08-91 | — | 12-30—15-30 | நாடகமும் அரங்கியலும் I |
| 27-08-91 | | | |
| 8-30-11-30 | நாடகமும் அரங்கியலும் II | 12-30—15-30 | நாடகமும் அரங்கியலும் III |

(74)


## 45 ஆவது நாள் நினைவஞ்சலி

வீரஜனனம் 30-11-1972    வீரமரணம் 14-06-1991

லெப்டினன்ட் ரவி

குமாரசாமி சாந்திகுமார்

அன்னை மடியைப்பற்றி நின்றாய்! அன்று
மண்ணின் மடியைப்பற்றினாய் இன்று
தோளிலே சுமந்தனை புத்தகச் சுமையே
வாழ்வெனச் சுமந்தனை ஆயுதம் தன்னை
மண்ணில் மேல் நின்று மாவீரர் மத்தியில்
எண்ணிய முடித்தாய் இளைஞனே சாந்தி
நாட்டுக்காக விடுதலைக்காக மண்ணின் மீட்புப்
பணியினை விரும்பினாய்
புண்ணியம் பெரிது போய் வா சாந்தி

அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியை (28-07-1991) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

இந்திரன் அம்மன் கோயில் வீதி,    தந்தை, தாய்
துன்னாலை வடக்கு,    சகோதரர்கள், மற்றும் உறவினர்
கரவெட்டி.    07101


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 27.07·91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.